www.tamilarangam.net

ஈழமுழக்கம்

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின்
(EPRLF)

# ஈழ விடுதலைக் கண்காட்சி

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (EPRLF) ஈழவிடுதலைக் கண்காட்சி தமிழகத் தலைநகரம் சென்னையில் கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்று வருகின்றது. இக் கண்காட்சியை வழக்கறிஞர் தோழர் என். டி. வானமாமலை திறந்து வைத்தார். திறப்பு நிகழ்ச்சிக்கு தோழர் வே. ஆனைமுத்து தலைமை வகித்தார். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சார்ந்த தோழர் ஈழ மணி வரவேற்புரையாற்றினார். தமிழக ஈழ நட்புறவுக் கழகச் செயலாளர் தோழர் ந. அரணமுறுவல் உரையாற்றினார். ஈழமக்கள் செய்தித் தொடர்புநிலைய (EPIC) இயக்குனர் தோழர் டி. என். ராஜு நன்றி கூறினார்.

தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இக் கண்காட்சியை பார்வையிட்டுவருகின்றனர். இக்கண் காட்சியில்:

ஃ 1948ல் இருந்து இன்று வரை ஈழத்தில் நடந்த கோரக் கொலைகள், வதைகள், தீவைப்புகளின் புகைப்படங்கள் ஓவியங்கள் 000

ஃ வெலிக்கடைச் சிறைப்படுகொலை மட்டக்களப்பு சிறைத் தகர்ப்பு பற்றிய விளக்கப்படங்கள், செய்திகள் 000

ஃ மலையகம் வாழ் ஈழ மக்கள் மீதான ஒடுக்குமுறைகள், ஈழத்தின் பொருளாதார வளங்கள் சிங்களக் குடியேற்றம் போன்றவற்றினை விளக்கும் ஓவியங்கள் புள்ளி வபரங்கள் செய்திகள்

ஃ ஈழவிடுதலைப் போராட்டத்தில் முன்னணியின் (EPRLF) வீரமிக்க நடவடிக்கைகள்: ஈழ மக்களின் எழுச்சிப் போராட்டங்கள் பற்றிய தகவல்கள் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளன.

தமிழக மக்களுக்கு மிக இலகுவில் விளங்கும் வண்ணம் இக் கண்காட்சி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இக்கண்காட்சியை பார்வையிட்ட அரசியல் கட்சிப் பிரமுகர்களும் தமிழக மக்களும் ஈழப் போராட்டத்திற்கு தமது பலமான ஆதரவு தொடர்ந்தும் உண்டு என உறுதி கூறிச் சென்றுள்ளனர். கண்காட்சி மண்டபத்தில் வைக்கப்பட்டிருக்கும் கருத்துக்களைப் பொறிக்கும் புத்தகத்தில் கருத்தாளமிக்க பல குறிப்புகள் எழுதப்பட்டுள்ளன. பெரும்பாலானோர் ஈழவிடுதலை இயக்கங்கள் மத்தியில் ஐக்கியம் ஏற்பட வேண்டும் எனவும்; மிகத் திறம்பட அமைக்கப்பட்டுள்ள இக்கண் காட்சியை தமிழக மெங்கும் நடத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்நியாய பூர்வமான வேண்டுகோளை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறோம். இயக்கங்களிடையே முக்கியம் ஏற்பட வேண்டும் என்ற திடமான முடிவுடன் எமது இயக்கமும் எமது தோழமை இயக்கங்களும் ஐக்கியத்திற்கான பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டு வருகின்றன வெகு விரைவில் இம் முயற்சி வெற்றி பெறும் என நம்புகின்றோம். மேலும் இக்கண்காட்சியை தமிழக மெங்கும நடத்துவதற்கு முயற்சி செய்து வருகின்றோம். கண்காட்சியை திறம்பட நடத்துவதற்கு தமிழக மக்கள் எமக்கு ஒத்துழைப்பு தந்து எமது இயக்கத்துடன் நெருங்கிய உறவை ஏற்படுத்துவார்கள் என நம்புகின்றோம்.

வெற்றி வரை போராடுவோம்!

**கண்காட்சி அமைப்புக் குழு**

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF)



ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கண்காட்சி மண்டப வ[illegible]த்தில் மக்கள் கூடியிருக்கின்றார்கள்.



கண்காட்சியை வழக்கறிஞர் தோழர் என். டி வானமாமலை பார்வையிடுகின்றார் தோழர் ஈழ மணி கண்காட்சி பற்றி விளக்கமளிக்கின்றார்.

EPIC (U.K. Branch)
B M BOX 1738
LONDON WC1N 3XX

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமெரிக்கத் தூதரகத்தில் வரலாறு காணாத அமளி

# ஈழவிடுதலைப் போராளிகள் திடீர் நுழைவு

## "துப்பாக்கி" கண்டு அலுவலர்கள் ஓட்டம்; கைகலப்பு

**சென்னை, மார்ச் 31- அமெரிக்க தூதரகத்தில் வரலாறு காணாத அமளி ஏற்பட்டது; ஆர்ப்பாட்டக் காரர்கள் வைத்திருந்த நவீன காமிராவை-துப்பாக்கியென ஏமாந்து அலுவலக அமெரிக்கர்கள் ஓடிய கேலிக் கூத்தும் நடந்தது.**

வரலாறு காணாத ஆர்ப்பாட்டத்தை சென்னையில் உள்ள அமெரிக்கத்தூதரகம் நேற்று கண்டது. 'ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித்' (EPRLF) தோழர்கள் இந்த ஆவேசப் போராட்டத்தை நேற்று எழுச்சி மயமாக நடத்தினர்.

தூதரக அதிகாரிகளுக்கும்-ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினருக்கும் பலத்த கைகலப்புநடந்தது; தூதரக அலுவலகமே நேற்று யுத்தகளமாகியது

நிகழ்ந்தவை பற்றி ஈழமக்கள் புரட்சிகர முன்னணித் தோழர் ஈழமணியும் [ஈழப் போராளி]-

தமிழக ஈழ-நட்புறவுக் கழகத்தைச்சேர்ந்த தோழர் சேஷாத்திரியும் விடுதலைக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்ததாவது:

### சிங்களர்கட்கு போர்ப் பயிற்சி

"வட்டமேஜை மாநாடு என்ற நாடகம் ஒருபுறம்நடக்கிறது: இதன் மறுபுற நிகழ்ச்சியாக அமெரிக்க எடுபிடிநாடுகளான இஸ்ரேல், பங்களா தேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் சிங்கள வெறியர்கட்கு அமெரிக்க ஆதிபத்தியத்தின் தயவால் போர்ப் பயிற்சி தரப்படுகிறது.

தமிழ்ஈழப் போராளிகளின் கொரில்லா நடவடிக்கைகளை ஒடுக்குவது என்ற பெயரில் இந்த வேலை தொடர்கிறது.

'வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா' வானொலியல் ஈழத் தமிழர்கட்கு எதிரான செய்திகள் தொடர்ந்து ஒலிபரப்பப் படுகின்றன

அண்மையில் அமெரிக்க அரசின் உயர்மட்டப் பிரதிநிதியாக வந்த வின்பர்கர் இலங்கை கடற்படையுட்பட அனைத்து ராணுவத் தளவாடங்களையும் நவீனப் படுத்த அதிக நிதியுதவிக்கு வாக்களித்துச்சென்றிருந்தார், அதையடுத்துநவீனரக கடற்படைத் தளவாடங்கள் அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு வந்த தமிழர் ஒடுக்கலுக்குத் தாராளமாகப் பயன் படுத்தப்படுகின்றன.

விரைவில் அமெரிக்கா போகவுள்ள இலங்கை சர்வாதிகாரி ஜெயவர்த்தனா-அங்கு போய் ரீகனுடன் ராணுவ ஒப்பந்தம் செய்து கொள்ளவிருக்கிறார்.

பலவீனமானவனையும் இனப்படுகொலைக்கு பலப் படுத்தும் பயங்கர ஒப்பந்தமாக ரீகன்-ஜெயவர்த்தனா ஒப்பந்தம் திகழும்; இந்த ஒப்பந்தம் ஏற்படவிடாமல் தடுக்கும்முன் முயற்சியாகவும்

தமிழர்க்கு எதிராக இலங்கை அரசு செயல்பட உதவும் அமெரிக்க அரசின்போக்கை உலகுக்கு உணர்த்தவும் சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் முன் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்போனோம்.

நூற்றுக்கணக்கானதோழர்கள் தூதரகம் முன்-

"அமெரிக்க கொலைகாரா வியட்னாம் பாடத்தை ஈழத்தில் படிப்பாய்

தென் ஆசியா-மற்றொரு மத்திய அமெரிக்கா

சர்வதேச் முற்போக்கு சக்திகளே ஒடுக்குமுறைக்கெதிராக ஒன்றுபடுவோம்.

ஸ்ரீலங்கா கூலிப்பட்டாளமே! உன் சவப்பெட்டிகளை தயார்படுத்து

ஈழ இந்திய நட்புறவு ஓங்குக" முதலான முழக்கங்களை தமிழிலும்

'Cow-boy Reagan! off Eelam

Trincomalee will not be another Diego Garcia

U.S. Imperialists! Hands off Eelam

Yankees! Eelam will make you pay

Sri Lankan Aggressors! Off our Eelam

J.R.-Regan Plot-A threat to Indian Security

Down with U.S. Imperialism, Zionisim & Racism

Victory to Eelam Liberation Struggle" என எழுப்பினர்.

நேற்று பிற்பகல் ஒன்றரை மணியளவில் இந்த ஆர்பாட்டம் நடந்தபோது நாங்கள் இருவர் உட்பட சுமார் 50 பேர் ஒரு பாக்கெட் காமிராவை எடுத்துக் கொண்டு -எங்கள் கோரிக்கை மனுவை அமெரிக்கத் தூதுவரக உயரதிகாரியிடம் தரப் போனோம்.

காவலர்களோ இந்த நவீன காமராவை துப்பாக்கி என நினைத்து அஞ்சி ஓட்டமெடுத்தனர்.

### கைகலப்பு

அமெரிக்கத் தூதரகம் போன எங்களிடம்தூதுவரக அதிகாரிகள் முறையோடு நடக்காமல்பிடித்துவெளியே தள்ள முயன்றனர்.

இதையடுத்துஎங்களுக்கும் அவர்களுக்கும் சிறு கைகலப்பு நிகழ்ந்தது.

"அமெரிக்க ஏகாதிபத்தியமே; இலங்கையை விட்டு வெளியேறு; ரீகன்-ஜெயவர்த்தனா ராணுவ ஒப்பந்தம் ஏற்பட்டால் உலகின் எந்த மூலையிலும் அமெரிக்காவிற்கு தூதரகங்கள் இருக்காது" என்பன போன்ற முழக்கங்களை முழங்கினோம். இதற்கிடையில் தூதரகம் முன் தோழர்களெல்லாம் ரீகன், ஜெயவர்த்தனா கொடும்பாவிகளை எரித்தனர். அமெரிக்கா மற்றும் ஸ்ரீலங்கா தேசக் கொடிகளையும் எரித்தனர்.

அப்பொழுது வந்துசேர்ந்த போலீசார் எரிப்பு முயற்சியைத் தடுத்து-எரிந்தவற்றை அணைத்து அப்புறப்படுத்தினர்; பின்னர் கூடியிருந்தவர்களை கலைக்க முயன்றனர்; தூதரகத்தின் உள்ளிருந்த எங்களையும் வெளியேற்ற முயன்றனர். நாங்கள் படுத்தவாறு எங்கள் அறப்போரைத் தொடர்ந்தோம்.

### பலாத்காரம்

இதையடுத்து போலீசார் கடுமை காட்டத் துவங்கினர்; எங்களிடம் இருந்த மின்சார ஒலிபரப்பிகளை பறிமுதல் செய்தார்கள்; புகைப்படக் கருவியைப் பறித்து அதிலிருந்த படச்சுருளை அகற்றி நாசப்படுத்தினர்;பலாத்காரப் படுத்தி அலுவலகத்தைவிட்டு அப்புறப்படுத்த முயன்று தோற்ற போலீஸ் - குண்டுக்கட்டாக ஒவ்வொருவரையும் அலுவலக வளாகத்தின் வெளிப்புறங்கொணர்ந்து போலீஸ்வேன்களில் ஏற்றினர்.

அமெரிக்கத்தூதுவரகத்தினர் எழுத்துமூலமாய்த்தந்த புகாரை அடுத்து-ஆர்பாட்டம் செய்த எங்கள் மீது இ. பி. கோ.வின்-பல பிரிவுகளின் கீழ் வழக்குகள் பதிவாகியுள்ளன.

அத்துமீறிநுழைதல் கொடும்பாவிஎரித்தது, அமெரிக்க இலங்கை தேச நாட்டுக் கொடிகளை அவமதித்தது உட்பட பல குற்றச் சாட்டுகளின் பேரில் வழக்குப் போட்டுள்ளார்கள்.

விடுதலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இரத்த வெள்ளத்தில் ஈழம்

சிறீலங்கா சிங்கள இனவாத அரசு ஈழத்து மக்களை அழித்தொழிப்பதற்கான தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

1983 ஜூலை இனப் படுகொலையில் ஈழமக்கள் சிந்திய குருதியின் ஈரம் காயும் முன்னரே,

ஈழ மக்கள் மீது சிறீலங்காவின் இரத்த வெறிகொண்ட கூலிப் படைகள் மீண்டும் இப்போது வெறிகொண்டு பாய்ந்துள்ளன.

★ பத்து அப்பாவித் தமிழர்கள் வீதியில் வைத்துக் கூலிப்படையால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

★ 30 பேர் மரணத்தின் வாயிலில்

★ சந்தேகத்தின் பெயரில் ஈழமெங்கும் 500 பேர் சிறீலங்கா பட்டாளங்களின் சித்திரவதை முகாம்களில்

★ கைதுசெய்யப்பட்ட 500 பேரில் இதுவரை 6பேர் வதையின் பின் படுகொலை செய்யப்பட்டனர்.

★ பத்தாயிரம் ஈழ வாலிபர்களை அழித்தொழிக்க ஐந்து இலட்சம் பேர் கொண்ட அழித்தொழிப்புப்படை, "தேசிய இராணுவம்" எனும் பெயரில், சிறீலங்கா படுகொலை அரசால் நிறுவப்படுகிறது. இதற்கான நிதியும் திரட்டப்படுகிறது.

பேச்சு வார்த்தை, ஒப்பந்தம் என்ற இனிப்பு வார்த்தைகளை உச்சரித்துத் தனது இனவாத நடவடிக்கைகளை உலகின் கண்களிலிருந்து மறைத்துவிட சிறீலங்கா அரசு திட்டமிடுகின்றது.

இந்திய மக்களே !

நமது பாசமிகு தேசமான ஈழத்தையும், எழில்மிகு வாழ்வையும் காக்க வீரத்துடனும், உறுதியுடனும் போராடும் ஈழமக்களின் கரங்களை வலுப்படுத்துங்கள்.

சிறீலங்கா கொலைவெறி அரசுக்கெதிராகக் கிளர்ந்தெழுங்கள்!

**ஈழ-இந்திய மக்கள் ஐக்கியம் ஓங்குக!**

**இறுதி வெற்றிவரை**

**ஓயாது போரிடுவோம் !!**

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF)

EPIC (UK Branch)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கைக்கு அமெரிக்கபடைக

# சி.ஐ.ஏ. கைக்க

## சென்னையில் மாணவர்கள் ஆர்ப்ப

## சாம்பலை இலங்கை தூதரிடம் கொடு

## அமெரிக்க தூதரகத்தில் புகுந்து இலங்கை தமிழர் ஆர்ப்பாட்டம்

சென்னை, மார்ச் 31:
தமிழர்களை கொல்ல இலங்கை அரசுக்கு ஆயுதம் வழங்குவதைக் கண்டித்து, அமெரிக்க தூதரகத்தில் புகுந்து ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

அமெரிக்க. ஜனாதிபதி ரீகன், இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனே ஆகியோரின் கொடும்பாவிகளை அங்கு எரித்தனர்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த விடுதலை முன்னணியைச் சேர்ந்த 13 இளைஞர்கள் திடீரென்று அமெரிக்க தூதரகத்தில் புகுந்தனர்.

இலங்கைத் தமிழர்களை கொன்று குவிக்கஇலங்கை அரசுக்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆயுதங்கள் வழங்குவதைக் கண்டித்து அவர்கள் கோஷமிட்டனர்.

"அமெரிக்க கொலைகாரா! வியட்நாம் பாடத்தை ஈழத்தில் படிப்பாய்" "தென் ஆசியா-மற்றொரு மத்திய அமெரிக்காவா?" "அமெரிக்க ஏகாதிபத்தியமே-ஈழத்தை விட்டு வெளியேறு" "திரிகோணமலை மற்றொரு டீகோகார்ஷியாவாக மாறாது" "ஜெயவர்த்தனே-ரீகன் கூட்டு இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்து", "சர்வதேச முற்போக்கு சக்திகளே ஒடுக்குமுறைக்கு எதிராக ஒன்று திரளுங்கள்" என்று கோஷங்களை அவர்கள் முழக்கமிட்டனர்.

### கொடும்பாவி

அமெரிக்க ஜனாதிபதி ரீகன், இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனே ஆகியோரின் கொடும்பாவிகளை எரித்தனர்.

போலீசார் அவர்களை அப்புறப்படுத்த முயன்றபோது அவர்கள் தரையில் படுத்துக்கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அவர்கள் 13 பேர்களும் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

சென்னை, மார்ச் 31:
அமெரிக்க உளவு ஸ்தாபனமான சி.ஐ.ஏ. தூண்டுதலின் பேரில் இலங்கை அரசு தயாரித்துக் கொடுத்த "தமிழ்நாட்டில் ராணுவ பயிற்சி முகாம்" என்ற பொய்ச் செய்தியை வெளியிட்டு, இலங்கை தமிழர்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்திய "இந்தியா டுடே" ஆங்கில ஏட்டின் பிரதிகளை மாணவர்கள் கொளுத்தினார்கள்.

இந்த சாம்பலை சென்னையில் உள்ள இலங்கை தூதரிடம் மாணவர்கள் கொடுத்தார்கள்.

இந்தியாவை துண்டு போட ஐ.நா. சபையில் உள்ள அமெரிக்க தூதர் கிர்க்பாட்ரிக் அம்மையார் ரகசிய திட்டம் ஒன்றை வெளியிட்ட போது அது பற்றிய முழு விவரத்தையும் "நியூஸ் டுடே" வெளியிட்டது நினைவிருக்கலாம்.

"நியூஸ் டுடே" செய்தி தவறு என்று மறுப்பு வெளியிடுவதற்காக "இந்தியா டுடே" ஏட்டை சி.ஐ.ஏ நிறுவனம் பயன்படுத்தியது.

டெல்லியில் நடுநிலை நாடுகளின் மாநாடு நடைபெற்ற போது, இந்தியாவுக்கு எதிராக முஸ்லிம் நாடுகளைத் தூண்டிவிட்டு, மாநாட்டை தோல்வி அடையச் செய்ய சி.ஐ.ஏ. ஒரு சதி திட்டம் வகுத்தது.

அந்த சதி திட்டத்தை நிறைவேற்றவும் "இந்தியா டுடே" ஏட்டைத்தான் சி.ஐ.ஏ. தேர்ந்தெடுத்து. அசாம் கலவரம் பற்றி விஷமத்தனமான செய்திகளை வெளியிட்டது.

இதே போல பஞ்சாபில் அகாலிகளைத் தூண்டி விடும் வகையில் இந்தியா டுடே செய்திகளை வெளியிட்டு வருகிறது.

சி.ஐ.ஏ. உதவியுடன் அமெரிக்காவில் உள்ள சீக்கியர்கள் "காலிஸ்தான்" என்ற பெயரில் தனிநாடு கேட்டு நடத்தும் போராட்டத்துக்கும் "இந்தியா டுடே" முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை பிரசுரிக்கிறது.

வடக்கு எல்லையிலும், கிழக்கு எல்லையிலும் இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்கு உதவியாக இந்தியா டுடேயை பயன்படுத்திய சி.ஐ.ஏ. நிறுவனம், தெற்கே கடற்கரை எல்லையில் அமெரிக்க படைகளை நிறுத்தும் பயங்கர திட்டத்துக்கு உதவி செய்யும் வகையில் செய்திகளைப் பிரசுரித்து வருகிறது.

தமிழ்நாடு முழுவதும் பரவலாக இலங்கைத் தமிழ் விடுதலைப் புலிகளுக்கு ராணுவ பயிற்சி அளிக்கப்படுவதாகவும், ராமநாதபுரம் கடற்கரைப் பகுதியில் இறுதிப் பயிற்சி அளிக்கப்படுவதாகவும் கடந்த வாரம் இந்தியா டுடே ஒரு செய்தியை வெளியிட்டது.

இலங்கையில் நடந்த [illegible] மாநாடு தோல்வி அடையச் செய்வதற்காகவும், இலங்கை மீது படையெடுப்பு நடக்கப் போகிறது என்ற பீதியை சிங்களவர்களிடையே ஏற்படச் செய்து, அமெரிக்கப் படைகளை இலங்கை வரவழைக்க வேண்டும் என்ற திட்டத்துடனும் சி.ஐ.ஏ. நிறுவனம் இந்தப் பொய்ச் செய்தியை தயாரித்து இந்தியா டுடேயில் பிரசுரித்திருப்பதாக இலங்கையில் வெளியாகும் கம்யூனிஸ்ட் பத்திரிகை குற்றஞ்சாட்டியிருக்கிறது. "இந்தியா டுடே" செய்தியைத்தொடர்ந்து, யாழ்ப்பாணத்தில் 20க்கும் மேற்பட்ட தமிழர்களை இலங்கை விமானப் படையினர் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள்.

தமிழர்களின் வீடுகளில் பெட்ரோலை ஊற்றிக் கொளுத்தியிருக்கிறார்கள்.

இந்தப் பயங்கரங்களுக்கெல்லாம் காரணமாக இருந்த "இந்தியா டுடே" ஏட்டின் பிரதிகளை சென்னை மாணவர்கள் நேற்று கொளுத்தினார்கள்.

உலக இந்து மாணவர் முன்னணியைச் சேர்ந்த விடுதலை, ஜி.எஸ். யுவராஜ், எம்.எஸ். நாராயணன், டாக்டர் குணசேகரன் ஆகியோரது தலைமையில் நேற்று இலங்கை துணை ஹை கமிஷனர் அலுவலகத்திற்கு ஊர்வலமாக சென்றார்கள்.

அலுவலகம் முன்னால் கூடி நின்ற மாணவர்கள், தங்கள் கையோடு கொண்டு போயிருந்த 'இந்தியா டுடே' பத்திரிகையை தீ வைத்து கொளுத்

மக்கள் குரல்
31.3.84

## Demonstration bef U.S. Consulate

Ma

Eelam Peoples Revolut / L organised a demonstration Friday Consulate in Gemini corner. Heavy bust had been made in and around

Volunteers of the front burnt President Reagan and President Ja slogans raised included these

"Trincomalee shall not be another "U.S. imperialists—hands off Eelam plot—a threat to India's security imperialism, Zionism and Racism Liberation Front"

The demonstrators also shouted mning the brutal killing of 10 Tamils Sri Lanka Air Force men. The pro that more than 100 persons had bee than 1000 had been held as pri camps and were being tortured

Some of the processionists were police.

The Eelam Peoples' Information C statement has demanded the releas strators immediately

NEWS TODAY.
31.3.84

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ...ளை கொண்டுவர சதித்திட்டம்

# ...லி பத்திரிகை எரிப்பு

## ...ட்டம்;

## ...த்தார்கள்

...கள்.
...ன்னர் துணை ஹைகமி...
...ா நேரில் சந்தித்து அவ...
... பத்திரிகை எரித்த சாம...
... கொடுத்தார்கள்.

...மிழ்நாட்டில் விடுதலைப்...
...ளுக்கு ...ற்சி அளிக்கப்...
...தாக ஒரு செய்தி சுட்டு...
... இந்தியா டுடே பத்திரி...
...ல் வெளியாகியுள்ளது.
...ன செய்தி இது அமெ...
...வின் தூண்டுதலில் ...
...ட்டிருக்கும் ... பொய்...
...தி ... இப்படிப்பட்ட...

...பதி. மீண்டும் தமிழர்
...ாபடுகொலைக்கு ...டம்
...ாட்டிருக்கிறது. என்று கடு...
...யா கண்டனம் தெரி...
...து அதே ஆத்திரத்தில்,
...த பத்திரிகையை மாண...
...கள் தீயிட்டுக் கொளுத்தி...
...கள்.

...re

...as. Mar. 31
...eratio... ...ont
...ore the U.S
...olice bando-
...e Consulate
... effigies of
...ardene. The
...ego Garcia
...J.R.-Reagan
...wn with U.S
...ory to Eelam
...gans conde-
...Jaffna by the
...sionists said
...ct and more
...ers in army
...ested by the
...re in a press
... the demon-

# சிங்கள ராணுவம் வெறியாட்டம்

# தமிழர் கடைகள் தீக்கிரை

## பெட்ரோலை ஊற்றி தீவைத்தார்கள்

கொழும்பு, மார்ச். 31: தமிழர்கள் வாழும் யாழ்ப்பாணம் பகுதியில் உள்ள கடைகள் மீது பெட்ரோலை ஊற்றி தீவைத்து கொளுத்தி சிங்கள ராணுவம் வெறியாட்டம் ஆடி வருகிறது.

தமிழர் வாழும் பகுதியில் இருந்து சிங்கள போலீசார் வெளியேற்றப்பட்டுள்ளனர். ராணுவம் மேலும் தாக்குதல் நடத்த வசதியாக இப்படி செய்யப்படுகிறதோ என்ற அச்சமான நிலைமை உருவாகியுள்ளது.

சிங்கள ராணுவத்தின் விமானப்படையினர் யாழ்ப்பாணம் பகுதியில் தொடர்ந்து கலவரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

நேற்று யாழ்ப்பாணம் பகுதியில் அச்சுவெல்லி என்ற இடத்தில் தமிழர்களுக்கு சொந்தமான கடைகளை சிங்கள ராணுவத்தின் விமானப் படையினர் தீ வைத்து கொளுத்தி கடைகளை தீக்கிரையாக்கினார்கள்.

அருகாமையிலுள்ள பெட்ரோல் பங்குகளுக்கு சென்று அங்கிருந்தவர்களை தாக்கி பெட்ரோலை எடுத்து சென்று தமிழர்களுக்கு சொந்தமான கடைகள் மீது ஊற்றி தீ வைத்தனர்.

பாலல்லி என்ற இடத்தில் விமானப்படை முகாம் உள்ளது. அங்கும் விமானப்படையினர் தீவைப்பில் ஈடுபட்டார்கள். அங்கிருந்த 10-க்கும் மேற்பட்ட தமிழர் கடைகள் மீது பெட்ரோலை ஊற்றி தீ வைத்து கொளுத்தி வெறியாட்டம் ஆடியிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மொத்தம் 3 பெட்ரோல் பங்குகளை தாக்கி விமானப்படையினர் பெட்ரோலை எடுத்து சென்று தமிழர் கடைகளுக்கு தீவைத்து வெறியாட்டம் ஆடி வருகின்றனர்.

இந்த தீவைப்பு சம்பவம் தொடர்பாக யாரும் கைது செய்யப்படவில்லை.

மக்கள் குரல்
31. 3. 84

### இந்தியா வன்முறையை ஆதரித்ததில்லை

இலங்கையில் மீண்டும் தமிழர்கள் ராணுவத்தினரால் கொல்லப்பட்டதற்கு இந்தியா வருத்தம் தெரிவித்தது பற்றி இலங்கை அரசு அதிகாரி ஒருவர் கருத்து தெரிவித்து இருந்தார்.

2 சிங்கள ராணுவத்தினர் கொல்லப்பட்டதற்கு மட்டும் ஏன் இந்தியா வருத்தம் தெரிவிக்கவில்லை என்று அவர் கேட்டு இருந்தார். இது இந்திய-இலங்கை உறவை பாதிக்கும் என்று அவர் கூறியிருந்தார்.

இதற்கும் இலங்கையில் உள்ள இந்திய ஹைகமிஷனர் சத்வால் பதிலளித்தார். இந்தியா வன்முறை செயல்கள் எங்கு நடந்தாலும் கண்டிக்க தவறியதில்லை என்று அவர் சுட்டிக்காட்டினர்.

### பிரேமதாசாவுக்கு மறுப்பு

தமிழகத்திலோ இந்தியாவின் எந்த பகுதியிலோ விடுதலை புலிகளுக்கு பயிற்சி அளிக்கப்படவில்லை என்று இந்தியாவின் ஹைகமிஷனர் எஸ்.ஜே.எஸ். சத்வால் திட்டவட்டமாக மறுத்தார். இலங்கை பிரதமர் பிரேமதாசாவின் புகாரை அவர் இவ்வாறு மறுத்து கூறினார். பயிற்சி அளிப்பதாக கூறி இலங்கை பிரதமர் தன்னிடம் எந்த ஆதாரத்தையும் தரவில்லை என்றும் அவர் கூறினார். இலங்கை பிரதமரை நேரில் சந்தித்த போது இந்த புகாரை மறுத்ததாகவும் அவர் கூறினார்.

### மலேசியா மறுப்பு

இந்தியாவில் தீவிரவாதிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுவதாக இலங்கை அரசு மீது குற்றஞ்சாட்டியது போல மலேசியாவிலும் இக்கயை பயிற்சி நடப்பதாக புகார் கூறியிருந்தது. இதை மலேசிய வெளிவிவகார துணை அமைச்சர் கதிர்சேகப்பட்ஜிர் மறுத்துள்ளார். இது ஆதாரமற்ற புகார் என்றும் அவர் கூறினார்.

EPIC (U.K. Branch)
B M BOX 1738
LONDON WC1N 3XX

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# EELAM PEOPLES' INFORMATION CENTRE
(EPIC)

presents

# "SANGAE MULANGU"

(VARIETY ENTERTAINMENT SHOW)

in aid of

# EELAM NEWS

ON SATURDAY 14th APRIL 1984
at 7.00 pm
MERTON HALL, 78 KINGSTON ROAD
LONDON SW 19

ON SATURDAY 28th JULY 1984
at 7.00 pm
ACTON TOWN HALL, HIGH STREET
LONDON W 3

Doors open at 6.30 p.m.,

Bar and Snacks available.

**Admission £ 2.00**

The Tamil speaking people in Sri - Lanka are now fighting for their survival and freedom. It is necessary and our duty to inform the world about these activities. In this regard **Eelam Peoples' Information Centre (EPIC)** was established in 1980 and has been publishing a monthly Tamil News bulletin **EELAM NEWS**. Our role would become more important and attain new level of functioning in the coming future and hope to fulfil these tasks with dedication. We call upon the **Eelam People** to participate in our endeavour to fulfil these objectives.

*For your free copy of Eelam News please write to:-*

EPIC
BM - Box 1738
London WC1 N8XX

EPIC
Post Bag 5551
Madras 600094, S India.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ★ Lanka Airmen run amok, burn Tamil shops in Jaffna

## ★ Buddhist clergy leader talks about Indian intervention

# India clarifies expression of regret

**[From Our New Delhi Bureau]**

New Delhi, Mar 31

India's expression of regret over the fresh incidents in Sri Lanka pertained to recourse to violence and force by all concerned, the spokesman of External Affairs Ministry clarified here Friday.

Reacting to reports quoting the foreign office spokesman in Colombo that India's expression of regret over the killings of Jaffna Tamils by the island air force would adversely affect bilateral relations, the External Affairs Ministry spokesman said the statement "appears to have been misconstrued".

The statement made here March 28, the spokesman said, referred to recourse to violence and force by all concerned.

India's High Commissioner in Sri Lanka J.S. Chattwal has been asked to get in touch with the authorities in Colombo to clarify the position.

### Shops set ablaze

Seven Tamil-owned shops were set on fire Wednesday night in Apchuvelly, 18 km from Jaffna, in the Tamil-dominated Northern Province.

The shops were set ablaze with fuel drawn from petrol stations, authorities said.

No arrests were made and there was no official report on who was responsible for the arson. But local residents claimed it was the work of the Air Force men.

About 10 shops near the Palali Air Force camp were set on fire while at least three petrol stations in different places in Jaffna district were attacked.

**Sinhala police withdrawn:** All Sinhalese police personnel working in the Jaffna peninsula have been withdrawn to Jaffna and Kankesanthurai as a precautionary measure, informed sources said.

The withdrawal follows attacks by Tamil terrorists on the Sinhalese police and Defence personnel. Four police personnel and two Air Force men had been shot dead in Jaffna by terrorists last week.

### No surprise this time

Meanwhile Sri Lanka's Minister for National Security Lalith Athulathmudali said Friday the Government would not be taken by surprise by another round of violence.

Seeking to allay apprehensions on the eve of the Pacific Area Travel Association (PATA) conference, Athulathmudali said "We are sure the kind of violence that broke out last July will not happen again".

"Then, we were taken by surprise, now we will not allow ourselves to be surprised," he said at the opening of a new wing of the Lanka Oberoi Hotel.

### Attack on India

A Buddhist clergy leader in Sri Lanka has said that the question facing the country now was the Indian interference and therefore the settlement of stateless issue became important.

In an article prominently published by several Sri Lankan newspapers, Palipana Sri Chandananda Mahanayake Thera argued that the stateless people of Indian origin was an issue that could lend itself to Indian interference.

"The question we have to face now is the interference by Indian Government in the name of safeguarding the interests of Indians living in this country who complain that they are being harassed and ill-treated by Sinhalese," said the monk who is the leader of the Buddhist Mahasangha delegation to the all-party conference on ethnic amity.

The statement was in the nature of a justification of the Mahasangha's proposal that led to a consensus at the conference in favour of Lankan citizenship for the stateless.

### Adjourn moves fail

Janata members in the Lok Sabha Friday tried in vain to raise the issue of reported use of air force by Sri Lanka authorities to deal with Tamil minorities.

Deputy Speaker G. Lakshmanan told Prof. Subramanyam Swamy and others that the Speaker had disallowed their adjournment motions.

Another Janata member B.S. Parulekar cited precedents to press his point that it was not open to the Speaker to reject any notice of an adjournment motion if it was *prima facie* in accordance with the rules. He had to make a reference to the motion in the House and allow the sponsors and the Government to make their observations before taking a decision.

But the Deputy Speaker cited another ruling of the Speaker to say he was not bound to give any reason for disallowing any adjournment motion.

Janata leader Prof. Madhu Dandavate sought to raise an issue relating to the latest development in the conflict between the Andhra Pradesh Legislature and the judiciary over the question of privilege. He said it was something which concerned all sections of the House. The decision to make a presidential reference has been dropped on a resolution of the State Legislative Council.

Stating that the failure to codify privilege of legislature had been creating problems for the press from time to time, Prof. Dandavate said "we should not glibly talk about supremacy. In a constitutional framework, the position of Parliament and judiciary have to be clearly re-stated," he asserted.

The Deputy Speaker said the Speaker had already decided to call a meeting of leaders of all groups before allowing a discussion on the subject and counselled the member to await results of that meeting.

NEWS TODAY 31.3.84.

# அமெரிக்கத் தூதரகத்தின் முன் ஈழ மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

சென்னை, மார்ச். 30—

ஈழமக்கள் புரட்சிகர முன்னணியினரும் இதன் மாணவர் அமைப்பைச் சேர்ந்த மாணவர்களும் சென்னை அண்ணாசாலையில் ஆர்ப்பாட்டம் நடத்தி அங்குள்ள அமெரிக்கத் தூதரகத்தினுள் புகுந்தனர். இன்று மதியம் இரண்டு மணி நேரம் அமெரிக்க தூதர் அலுவலகம் அமளிதுமளிப்பட்டது.

**வியட்னும் பாடம்!**

அமெரிக்க ஏகாதிபத்தியமே ஈழத்தில் இருந்து வெளியேறு, அமெரிக்கக் கொலைகாரா, வியட்னும் பாடத்தை ஈழத்தில் படிப்பாய்! என ஏகாதிபத்திய எதிர்ப்பு கோஷங்களை முழக்கினர்.

சென்னையில் உள்ள பல கல்லூரி மாணவர்கள் சுமார் 100 பேர் தூதரக அலுவலகத்தை சுற்றி நின்று அமெரிக்க எதிர்ப்பு கோஷங்களை எழுப்பினர்.

**ரீகன் கொடும்பாவி எரிப்பு!**

அமெரிக்க ஜனாதிபதி ரீகன், ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஜெயவர்த்தனே கொடும்பாவிகளை அமெரிக்க தூதரக அலுவலகம் முன்னால் எரித்து கோஷங்கள் முழக்கினர்.

**கைது!**

இது தொடர்பாக ஈழ மாணவர் பொதுமன்றத்தைச் சேர்ந்த ஈழ மணி என்பவரும் ஸ்ரீலங்கா குடிமக்களும் தமிழக ஈழ நட்புறவுக் கழகத்தைச் சேர்ந்த சேஷத்திரியும் கைது செய்யப்பட்டனர்.

அமெரிக்க ஏகாதிபத்தியமும் ஸ்ரீலங்கா இன வெறியரசும் இணைந்து கொண்டு ஈழ மக்களை கோரமாக படுகொலை செய்து வருகிறது. இதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு பயிற்சி அளித்து வருகிறது, நவநவீன ஆயுதங்களையும் பணத்தையும் சிங்கள அரசுக்கு வழங்குகிறது என்று ஈழமணி தெரிவித்தார்.

தினசக்தி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அமெரிக்கப் பின்பலம்

ஆர்ப்பாட்டம் ரகளையாக மாற அமெரிக்கத் தூதுவரகத்தினரே காரணம்; ஈழ விடுதலைக்கு எதிரி ஜெயவர்த்தனாவும், சிங்கள வெறியர்களும் மட்டுமே காரணமல்ல.

இந்தப் படுகொலைப் பேர்வழிகளுக்கு அமெரிக்கப்பின் பலமும் இருப்பதால்தான் தனி ஈழம் தாமதமாகிறது; இதை உலகுக்கு உணர்த்தவும், அமெரிக்கா-இலங்கை ஒப்பந்தம் ஏற்படாதிருக்க மக்கள் கவனத்தை ஈர்க்கவுமே வன்முறையற்ற ஆர்ப்பாட்ட அறப்போரை 'ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி' நடத்தியது.

இதற்காக தமிழ்நாடு அரசு எங்கள்மீது வழக்குப்போடுவது நியாயமானதல்ல; வழக்குப்போடப்பட்ட எங்களை சொந்த ஜாமீனில் விடுவித்துள்ளனர்; தமிழ்நாடு அரசு வழக்குகளை ரத்து செய்ய வேண்டும்.

ஏற்கனவே நேற்று ஆர்பாட்டம் நடத்திய மாணவர்கள் மீதும் ஜோடிப்பு வழக்குகளைப் போட்டிருக்கிறார்கள்; அதையும் ரத்து செய்ய வேண்டும்.

## மக்கள் எழுச்சி

வரும் 3ந் தேதி புதனன்று எங்களது அறப்போர் அமெரிக்கத் தூதரகம் முன் மீண்டும் தொடரும்.

**சிறீலங்கா இனப்படுகொலையைக் கண்டித்து அமெரிக்கத் தூதரகத்தை நோக்கி**

# மாணவர் ஆர்ப்பாட்டப் பேரணி

✠ சிங்கள இனவெறி அரசே
தமிழர்களை வேட்டையாடாதே!

✠ அமெரிக்க ஏகாதிபத்தியமே
ஈழத்தைவிட்டு வெளியேறு!

✠ இந்தியப் பாதுகாப்புக்கு எதிராக சதிசெய்யும்
ஜே. ஆர். - றீகன் கூட்டை முறியடிப்போம்!

✠ சிறீலங்கா கூலிப்பட்டாளமே!
உன் சவப்பெட்டிகளை தயார்ப்படுத்து.

✠ சிறீலங்கா அரசின் படுகொலைகளைக் கண்டித்தும், இப்படுகொலை அரசுக்குத் துணை போகும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தைக் கண்டித்தும் அனைத்துக் கல்லூரி - பள்ளி மாணவர்கள் நடத்தும்

கண்டனப் பேரணி
நேப்பியர் பூங்காவிலிருந்து கிளம்புகிறது

நாள்: **30-3-84**
காலை 10 மணி

மாணவர்களே திரண்டுவாரீர்!

**ஈழ மாணவர் பொதுமன்றம்**
(EPRLF மாணவர் பிரிவு)

அமெரிக்க கொலைகாரா! வியட்நாம்
பாடத்தை ஈழத்தில் படிப்பாய்.

EPIC (U.K. Branch)
B M BOX 1738
LONDON WC1N 3XX

தென் ஆசியா - மற்றொரு மத்திய அமெரிக்கா

ஈழ இந்திய நட்புறவு ஓங்குக.

**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்